செய்தி வெளியீடு எண்:438 நாள்: 25.07.2012

**பத்திரிக்கை செய்தி.**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு ந.சுப்பிரமணியன் அவர்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் வழங்கப்படும், தூய்மைப்பணி புரிவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை மற்றும் பெண் கல்வி ஊக்குவிப்புத்தொகை ஆகியவைகள் உரியவர்களுக்கு சென்றடைவதை உறுதி செய்ய கீழ்க்கண்ட கல்வி நிலையங்களில் நேரில் சென்று திடீர் ஆய்வு செய்தார்.

1. ஆக்ஸின் எவான்ஜலிக்கல் மிஷன் ஆரம்பப்பள்ளி,
காமராஜ் நகர், கொருக்குப்பேட்டை, சென்னை– 21.

2. புனித ஜோசப் பெண்கள் ஆரம்பப்பள்ளி,
சூளை, சென்னை – 112

3. ஆக்ஸின் எவான்ஜலிக்கல் மிஷன் உயர்நிலைப்பள்ளி,
காமராஜ் நகர், கொருக்குப்பேட்டை, சென்னை – 21.

4. புனித ஜோசப் பெண்கள் உயர் நிலைப்பள்ளி,
சூளை, சென்னை – 112.

ஆய்வின் போது சம்பந்தப்பட்ட மாணவ/ மாணவியர்களிடம் நேரிலும், அவர்களது பெற்றோர்களிடம் கைபேசி மூலம் தொடர்பு கொண்டு உதவித்தொகை பெறப்பட்ட விவரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார். வழங்கப்பட்ட கல்வி உதவித்தொகை சம்பந்தப்பட்டவர்களுக்கு சென்றடைந்துள்ளது என்பதனை உறுதி செய்தார்.

மேலும், 1) இராயபுரம் கல்லூரி மாணவியர் விடுதி (இணைப்பு)

2) இராயபுரம் முதகலை கல்லூரி மாணவியர் விடுதி (இணைப்பு)

3) பணி செய்யும் மகளிர் விடுதி

ஆகியவற்றிற்காக வேப்பேரி பணித்தளத்தில் தாட்கோ மூலம் கட்டப்பட்டு வரும் கட்டிடப்பணிகளை திடீர் ஆய்வு செய்து கட்டிடம் உறுதி தன்மையில் கட்டப்பட்டு வருவதை உறுதி செய்தும் துரித நடவடிக்கை மேற்கொண்டு பணியினை விரைவாக முடிக்க அறிவுரையும் வழங்கினார்.

அது சமயம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திரு.A.S.ஜீவரத்தினம்,இ.ஆ.ப. ,அவர்களும் சென்னை மாவட்டத்தின் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் செல்வி.S.இராஜேஸ்வரி அவர்களும் உடனிருந்தனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**